கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 05.02.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**நுண்ணுயிர் - பயிர்த் தொடர்பு மேம்பாடு மற்றும் மண் வளம் - நுண்ணுயிர்க்கலவை மற்றும் உயிரியல் தூண்டிகள் கருத்தரங்கு**

இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் நிதியுதவியுடன் நுண்ணுயிர் - பயிர்த் தொடர்பு மேம்பாடு மற்றும் மண் வளம் - நுண்ணுயிர்க்கலவை மற்றும் உயிரியல் தூண்டிகள் போன்ற உத்திகளின் வாயிலாக பசுமையான பங்களிப்பை அளிப்பதற்காக நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் நுண்ணுயிரியல் துறையில் உள்ள கருத்தரங்கில் 21 நாட்கள் குறுபாடப் பயிற்சி தொடக்க விழா பிப்ரவரி 05.2.25 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் உ.சிவக்குமார் (வேளாண் நுண்ணுயிரியல் துறை) வரவேற்புரையாற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து வருகை புரிந்த அனைவரையும் கௌரவித்தார். இதைத் தொடர்ந்து இந்திய மாநிலங்கள் முழுவதிலும் உள்ள ஏறக்குறைய 15 பங்கேற்பாளர்கள் தங்களைப் பற்றி சுய அறிமுகம் செய்துகொண்டதோடு பயிற்சித் திட்டத்தின் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். அதன் பின்னர் இயற்கை வள வேளாண்மை இயக்குநர் முனைவர் பாலசுப்ரமணியம் அவர்கள் சிறப்புரையாற்றி வேளாண் நுண்ணுயிரியல் துறையின் அத்தகைய வியத்தகு பங்களிப்பைப் பாராட்டினர். மேலும் இந்த சிறப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினர் முனைவர்.தமிழ்வேந்தன் (பதிவாளர்) அவர்கள் இந்தக் பாடப்பயிற்சிக் கையேட்டை வெளியிட்டு விழா தொடக்க உரையாற்றினார். மேலும் தாவர நுண்ணுயிர் தொடர்பு பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளுக்காக நுண்ணுயிரியல் துறையைப் பாராட்டியதுடன் அதிக எண்ணிக்கை மற்றும் அதிக தாக்கம் கொண்ட ஆராய்ச்சி வெளியீடுகள், நுண்ணுயிர் துறை ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் துறை சார்ந்த இயந்திரங்களின் பங்களிப்பினை முன்னிலைப்படுத்தி கௌரவப்படுத்தினார். நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக பேராசிரியர் முனைவர்.த.கலைச்செல்வி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். சுற்றுச்சூழல் துறை, மண்ணறிவியல் துறை, நானோ தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**